இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

ஆசிசரியர் கல்வியில் முதுகலைமாணி - பகுதி 11

இறுதிப் பரீட்சை - 2006

**ESP** 2470 - ஆரம்ப மட்டத்தில் தமிழ்மொழி

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

---

திகதி: 06.03.2006 நேரம்: மு.ப 10.00 - பி..ப 1.00 வரை

---

மூன்று(03) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.

1. (i) எண்ணக்கரு விருத்தியில் மொழியின் முக்கியத்துவத்தை நுணுக்கமாக ஆராய்க.

   (ii) எண்ணக்கரு உருவாக்கத்தில் சூழலின் தாக்கத்தினை உதாரணங்களுடன் விளக்குக.

   (iii) எண்ணக்கரு உருவாக்கம் தொடர்பாக விளக்கம் அளித்த உளவியலாளர் மூவரின் பெயரைக் குறிப்பிட்டு அவர்களது கோட்பாடுகளைச் சுருக்கமாக விபரிக்க.

2. (i) ‘ஆக்கத்திறன் விருத்தி’ என்ற எண்ணக்கருவினை விளக்குக.

   (ii) ஆக்கத்திறன் விருத்தியில் மொழியின் பங்களிப்புக் குறித்து கருத்துரைக்க.

   (iii) ஆரம்பவகுப்பு மாணவர்களது ஆக்கத்திறன் விருத்திக்காக மொழியாசிரியர் என்ற வகையில் நீங்கள் மேற்கொள்ளக்கூடிய மூன்று நடவடிக்கைகளை விபரிக்க.

3. (i) கணிப்பீடு, மதிப்பீடு என்பவற்றை எவ்வெச் சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவது பொருத்தமானது என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

   (ii) கணிப்பீட்டுக் கருவிகளைத் தயாரிக்கும்போது கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயங்கள் ஐந்தினைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றையும் சுருக்கமாக விளக்குக.

   (iii) ஆரம்பவகுப்பு மாணவர்களின் மொழி அடைவைக் கணிப்பிடுவதற்குப் பொருத்தமான கணிப்பீட்டு கருவிகள் மூன்றினைத் தயாரிக்குக. அவை ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான புள்ளி வழங்கும் திட்டத்தினைத் தருக.

4. அடிப்படை மொழித்திறன்களைக் கற்பிப்பதே ஆரம்பக்கல்வி ஆசிரியரின் முக்கிய பணி.

   (i) அடிப்படை மொழித்திறன்களை ஆரம்ப வகுப்பு மாணவர் எவ்வாறு கற்றுக்கொள்கின்றனர் என்பதை விபரிக்க.

   (ii) முதன்மைநிலை இரண்டு மாணவருக்கு அடிப்படை மொழித்திறன்களைக் கற்பிப்பதற்கு எத்தகைய கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்துவது பொருத்தமானது? உதாரணங்களுடன் விளக்குக.

   (iii) ஆரம்பவகுப்பு மாணவருடைய சுயகற்றலை மேம்படுத்தப் பயன்படுத்தக்கூடிய மூன்று கற்றல் சாதனங்களைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்றையும் விபரிக்க.

5. (i) ஆரம்பவகுப்பு மாணவர்கள் கதைகள் மற்றும் சிறுவர் பாடல்களை அதிகம் விரும்பிக் கற்பதற்கான காரணங்களை விபரிக்க.

(ii) முதன்மை நிலை மூன்றில் தற்போதுள்ள பாடநூலில் சிறுவர் இலக்கியத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள இடம் தொடர்பாகக் கருத்துரைக்க.

(iii) இலங்கையில் சிறுவர் இலக்கியத்திற்கு பங்களிப்புச் செய்த மூவரின் பெயரைக் குறிப்பிட்டு, அவர்களின் பங்களிப்புப்பற்றிச் சுருக்கமாக விபரிக்க.

6. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்று(03) பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.

(i) ஆரம்பவகுப்பு மாணவர்களின் மொழிவிருத்திக்கு குழுச் செயற்பாடுகளின் முக்கியத்துவம்

(ii) ஆரம்பவகுப்பு மாணவர்களின் மொழிவிருத்தியில் நவீன தொழினுட்பத்தின் வகிபங்கு.

(iii) கிரகித்தல் திறனை மேம்படுத்துவதில் வாசிப்பின் முக்கியத்துவம்

(iv) இலங்கையில் இலக்கிய விமர்சனத்துறையின் வளர்ச்சி.

(பதிப்புரிமையுடையது)